# சிறப்புக் கல்வி

# பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கான தொடர்பாடல் வழிகாட்டி

## எனக்கு ஒரு பிரச்சனை இருக்கும்போது, நான் எங்கிருந்து துவங்குவது?

மாணவர்களின் வெற்றிக்கே முன்னுரிமை. மாணவர்களின் வெற்றியை உறுதி செய்ய பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் ஆதரவு குழுக்கள் இணைந்து செயல்படுகின்றன.

உங்கள் பிரச்சனைகளை நன்கு அறியக் கூடிய நபரிடம் தொடங்குவது தான் சிறந்த வழி (எ.கா. வகுப்பறை ஆசிரியர், சிறப்புக் கல்வி வள ஆசிரியர்(special education resource teacher - SERT), பேருந்து ஓட்டுனர் போன்றோர்). பிரச்சனைகள் அல்லது சிக்கல்களைக் தீர்ப்பதற்கு உதவ, நீங்கள் செய்யவேண்டியவை:

- நிலைமையைப் பற்றி முடிந்தவரை தகவல்களைச் சேகரிக்கவும்; மற்றும்
- உங்கள் பிரச்சனைப் பற்றி விவாதிக்க பள்ளியைத் தொடர்புகொண்டு, பணியாளர் உறுப்பினர்(கள்) உடன் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யவும்.

அர்த்தமுள்ள மற்றும் குறிக்கோளுடன் கூடிய உரையாடல்களை மேற்கொள்வதன் மூலம் பெரும்பாலான சிக்கல்களைத் தீர்க்க முடியும். தகவல்தொடர்பு முறைகளை ஏற்கும் நிலையில் வைத்திருப்பது சிறந்த உத்தி.

## எனது குழந்தையின் பாடத் திட்டம் குறித்தோ அல்லது சிறப்புக் கல்வி சேவைகள் தொடர்பான பிரச்சனைகளைத் தெரிவிப்பதில் பெற்றோராக என் பங்கு என்ன?

உங்கள் பிரச்சனைகளைத் தெரிவிக்க நீங்கள் முன்வருவதை நாங்கள் வரவேற்கிறோம்.

**1. உங்கள் அணுகுமுறையைத் திட்டமிடுங்கள்.**

- அது சார்ந்த தகவல்களைச் சேகரியுங்கள்.
- இது பற்றிய தகவல்களை முன்னரே அறிந்து தெளிவாக இருங்கள்.
- நீங்கள் முன்னிலைப்படுத்த விரும்புவதை முறைப்படி வரிசைப்படுத்துங்கள்.
- நீங்கள் என்ன கேள்விகளைக் கேட்க விரும்புகிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**நினைவில் கொள்க:**

- சிறப்புத் தேவைகளைக் கொண்ட குழந்தைகள் மற்றும் குடும்பங்களை ஆதரிக்கும் யார்க் பகுதியில் உள்ள நிறுவனம்/அமைப்பைத் தொடர்புகொள்வது உதவலாம்.
- நண்பரையோ அல்லது வழக்கறிஞரையோ நீங்கள் ஈடுபடுத்த விரும்பினால் அது வரவேற்கப்படுகிறது. உங்கள் பிரச்சனைகளை தெரிவிப்பதில் அவர்கள் பங்கேற்பதை நாங்கள் வரவேற்கிறோம்.

**பெற்றோருக்கான வழிகாட்டிகள்**

உங்கள் கவனத்தை ஈர்க்கும் மற்ற பிற வளங்களும் உள்ளன:

- அடையாளம் காணுதல், நிலைப்படுத்துதல்,மறுஆய்வுக் குழு (ஐபிஆர்சி) க்கானபெற்றோர் வழிகாட்டி
- தனிப்பட்ட கல்வித் திட்டம் குறித்த பெற்றோருக்கான வழிகாட்டி
- சிறப்புத் தேவைகள் உள்ள மாணவர்களுக்காக உதவித் தொழில்நுட்பம்மற்றும் உபகரணங்களுக்கானசிறப்புக் கல்வி நிதிக்கான பெற்றோர் வழிகாட்டி (தற்போது ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கிறது)

**2. பள்ளி ஊழியர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்**

- நேர்மறை எண்ணம் கொண்டிருங்கள்.
- ஒரு நேரத்தில் ஒன்று அல்லது இரண்டு பிரச்சனைகள் மீது கவனம் செலுத்துங்கள்.
- உங்கள் குழந்தையைப் பற்றி அவசியமானது என்று நீங்கள் கருதும் தகவல்களைப் பகிருங்கள்.
- வெளி மூலங்களிலிருந்து நீங்கள் சேகரித்த, பள்ளியில் நிரலாக்க முடிவுகளுக்கு உதவக்கூடியது என எண்ணும் தகவல்களைப் பகிருங்கள்.
- கவனமாகக் கேளுங்கள் - கலந்துரையாடலில் பங்கேற்கும் அனைவரிடமும் பகிர்ந்து கொள்ள முக்கியமான தகவல்கள் இருக்கும்.
- நீங்கள் காண விரும்பும் தீர்வுகளைப் பற்றி சிறிது சிந்தியுங்கள்.
- அடுத்த படிகளை இணைந்து திட்டமிடுங்கள்.
- கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள் மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பற்றி குறிப்பு எடுத்துக் கொள்ளுங்கள்.

**நினைவில் கொள்க:**

- உங்கள் பிரச்சனை முக்கியமானது - சில நேரங்களில் சிறந்த தீர்வுகளைப் பெறுவதற்கு நேரம் எடுக்கும்.
- தொடர்ந்து தொடர்பில் இருங்கள் - தொடர்ந்து தொடர்பு கொள்வது முக்கியம்.

## வாரியப் பணியாளர்களை அணுகுவது எப்படி?

**கல்வி மையம் அவுரோரா**

| அழைக்கும் இடம்: | ஸ்விட்ச் போர்ட் | தானியங்கி |
|---|---|---|
| அவுரோரா & கிங் | 905-727-3141 | 905-727-0022 |
| நியூமார்க்கெட்& ஈஸ்ட் விலிம்பரி | 905-895-7216 | 905-895-7227 |
| ஜார்ஜினா | 905-722-3201 | 905-722-6255 |
| மார்க்கம், ரிச்மாண்ட் ஹில், வான் விட்சர்ச்-ஸ்டோஃப்வில் | 416-969-8131 | 416-969-7170 |

**அடிக்கடி அழைக்கப்படும் எண்கள் தொலைபேசி எண்கள்**

கல்வி மற்றும் சமூக சேவைகள் 905-727-0022, எக்ஸ். 2266/2555

| | |
|---|---|
| மாணவர் சேவை ஒருங்கிணைப்பாளர்கள்: | |
| வடக்கு | (905) 895-5155 |
| மத்தியப் பகுதி | (905) 884-4477 |
| கிழக்கு | (905) 940-7800 |
| மேற்கு | (905) 764-6830 |
| சிறப்புக் கல்வி | (905) 727-0022, எக்ஸ். 3235 |
| மாணவர் போக்குவரத்து சேவைகள் | (905) 713-3001, எக்ஸ். 4551 |
| அறங்காவலர் சேவைகள் | 905-727-0022, எக்ஸ். 2327/2262 |
| கல்வி அமைச்சகம் | (416) 325-2929 அல்லது 1-800-387-5514 |

## எனது பிரச்சனை முறையாக கருதப்பட்டதாக நான் உணரவில்லை என்றால் என்ன செய்ய வேண்டும்?

உங்கள் குழந்தை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் எனும் உங்கள் விருப்பத்தை நாங்கள் புரிந்துகொள்கிறோம். உங்கள் பிரச்சனைகருதப்படவில்லை என்று நீங்கள் நினைத்தால், இந்தப் படிகளைப் பின்பற்றி, கீழேயுள்ள அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அடுத்த நபரைத் தொடர்பு கொள்ளுங்கள்:

### தொடக்கப் பள்ளிகள்

**ஆசிரியர்**
அனைத்து மாணவர்களுக்கும் ஆதரவு மற்றும்/அல்லது திட்டங்கள் வழங்குதல்

**எஸ்.இ.ஆர்.டி**
சிறப்புக் கல்வி ஆதரவு மற்றும்/அல்லது திட்டங்கள் வழங்குதல்

**முதல்வர்/துணை முதல்வர்**
மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பொறுப்பு

**மாணவர் சேவை ஒருங்கிணைப்பாளர்**
சமூகக் கல்வி மையத்தில் இருப்பார். சிறப்புக் கல்வி, அடையாளங்காணல் மற்றும் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குதல்

**கல்வித்துறை கண்காணிப்பாளர்**
சமூகக் கல்வி மையத்தில் இருப்பார். அனைத்து பள்ளிகளின் அன்றாட இயக்கங்களுக்குப் பொறுப்பு

**இணை இயக்குநர்கள்**
சமூகக் கல்வி மையத்தில் இருப்பார்கள்
கல்வி மற்றும் சமூக சேவைகளுக்குப் பொறுப்பு

**இயக்குநர் அலுவலகம்**
சமூகக் கல்வி மையத்தில் இருப்பார்கள்
கல்வி மற்றும் சமூக சேவைகளுக்குப் பொறுப்பு

**அறங்காவலர் குழு**
யார்க் பகுதியில் உள்ள அனைத்துப் பொதுப் பள்ளிகளின் இயக்கமுறைக் கொள்கையை அமைக்கிறது

**கல்வி அமைச்சகம்**
ஒன்ராறியோவில் பொது நிதியளிக்கப்பட்ட தொடக்க மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் கல்வி முறையை நிர்வகிக்கிறது

### மேல்நிலைப் பள்ளிகள்

**ஆசிரியர்**
அனைத்து மாணவர்களுக்கும் ஆதரவு மற்றும்/அல்லது திட்டங்கள் வழங்குதல்

**எஸ்.இ.ஆர்.டி**
சிறப்புக் கல்வி ஆதரவு மற்றும்/அல்லது திட்டங்கள் வழங்குதல்

**சிறப்புக் கல்வித் துறைத் தலைவர்**

**முதல்வர்/துணை முதல்வர்**
மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பொறுப்பு

**மாணவர் சேவை ஒருங்கிணைப்பாளர்**
சமூகக் கல்வி மையத்தில் இருப்பார். சிறப்புக் கல்வி, அடையாளங்காணல் மற்றும் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குதல்

**கல்வித்துறை கண்காணிப்பாளர்**
சமூகக் கல்வி மையத்தில் இருப்பார். அனைத்து பள்ளிகளின் அன்றாட இயக்கங்களுக்குப் பொறுப்பு

**இணை இயக்குநர்கள்**
சமூகக் கல்வி மையத்தில் இருப்பார்கள்
கல்வி மற்றும் சமூக சேவைகளுக்குப் பொறுப்பு

**இயக்குநர் அலுவலகம்**
சமூகக் கல்வி மையத்தில் இருப்பார்கள்
கல்வி மற்றும் சமூக சேவைகளுக்குப் பொறுப்பு

**அறங்காவலர் குழு**
யார்க் பகுதியில் உள்ள அனைத்துப் பொதுப் பள்ளிகளின் இயக்கமுறைக் கொள்கையை அமைக்கிறது

**கல்வி அமைச்சகம்**
ஒன்ராறியோவில் பொது நிதியளிக்கப்பட்ட தொடக்க மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் கல்வி முறையை நிர்வகிக்கிறது

## எனது குழந்தையின் தேவைகளுக்கு எனக்கு உதவ என்ன வளங்கள் உள்ளன?

விதிவிலக்கான கற்றல் தேவைகளுடன் அடையாளம் காணப்பட்ட மாணவர்களுக்குத் தேவையான திட்டங்கள் மற்றும் சேவைகள் குறித்து வாரியத்திற்கு ஆலோசனை வழங்குவதில் யார்க் பகுதியில் சிறப்பு கல்வி ஆலோசனைக் குழு Special Education Advisory Committee – SEAC முக்கியப் பங்கு வகிக்கிறது.

சிறப்புக் கல்வித் திட்டங்கள் மற்றும் சேவைகளை நிறுவுதல் மற்றும் மேம்படுத்துவது குறித்து வாரியத்திற்கு எஸ்.இ.ஏ.ஸி பரிந்துரைக்கலாம். எஸ்.இ.ஏ.ஸி-ல் பல நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் பிரதிநித்துவம் கொண்டுள்ளன, ஒவ்வொன்றும் பெற்றோருக்கு உதவி மற்றும் வளங்களை வழங்குகின்றன.

நீங்கள் எஸ்.இ.ஏ.ஸி பற்றிய தகவல்களை **www.yrdsb.ca**ல் அணுகி அறிந்து சிறப்புக் கல்வியைத் தேர்ந்தெடுக்கலாம்.

பின்வரும் நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் வாரியத்தின் எஸ்.இ.ஏ.ஸி-ல் பிரதிநித்துவம் கொண்டுள்ளன:

- அறிவுக் கூர்மையான குழந்தைகளுக்கான சங்கம் - யார்க் பகுதி வடக்கு
- அறிவுக் கூர்மையான குழந்தைகளுக்கான சங்கம் - யார்க் பகுதி தெற்கு
- ஆட்டிஸம் (Autism) ஒன்ராறியோ - யார்க் பகுதி
- குழந்தைகளை நடத்தும் முறை வலையமைப்பு
- சமூக வாழ்க்கை மத்திய யார்க்
- சமூக வாழ்க்கை ஜியார்ஜினா
- யார்க் பகுதியின் டவுன் சின்ட்ரோம் உள்ளோர் சங்கம்
- யார்க் பகுதியின் ஆரம்பத் தலையீடு சேவைகள்
- ஈஸ்டர் சீல்ஸ் ஒன்ராறியோ
- கற்றல் குறைபாடுள்ளோர் சங்கம் - யார்க் பகுதி
- பார்வையற்றோருக்கான VIEWS
- செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளின் VOICE
- யார்க் தெற்கின் சமூக வாழ்வுச் சங்கம்,
- யார்க் ஆதரவுச் சேவைகள் வலையமைப்பு

York Region District School Board
Inspire Learning!

www.yrdsb.ca @YRDSB